2022 அக்டோபர் 19]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, அப்பநாயக்கன்பட்டி புதூரில் புதிய துணை மின் நிலையம் அமைக்க 3 ஏக்கர் அரசு நிலம் கண்டறியப்பட்டு, நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

ஆரம்ப சுகாதார நிலையம்

***7180—திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் மற்றும் காத்திருப்பு அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பல்லடம் சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முதலிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து

மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, முதலிபாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் காத்திருக்க போதிய இட வசதியும் உள்ளது. எனினும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, எதிர்வரும் காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் காத்திருப்போர் அறை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

கம்பிவட ஊர்தி வசதி

***61448—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, திருநீர்மலை அருள்மிகு நீர்வண்ணப் பெருமாள் திருக்கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநீர்மலை அருள்மிகு ரங்கநாதப் பெருமாள் திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் 61—வது திவ்ய தேசமாகக் கருதப்படுகிறது. 180 படிகளைக் கொண்ட இத்திருக்கோயிலின் படிகளில் ஏறி வயது முதிர்ந்தோர், உடல் நலம் குன்றியோர் உள்ளிட்டோர் சுவாமி தரிசனம் செய்வதற்குக்